**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25–ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**I.A.10/2025 in O.S.02/2010**

1. ராமசாமி இறந்தார்,
2. மதுராம்பாள், இறந்தார்,
3. ரெங்கநாதன்,
4. தனலெட்சுமி, .... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

1.விமலா,
2. மணிமாலா இறந்தார்,
3. புஷ்பவள்ளி,
4. நடராசன்,
5. சரஸ்வதி இறந்தார்,
6. கண்ணன்,
7. தமிழரசி,
8. முருகன்,
9. தேவந்திரன்,
10. நந்தகுமார்,
11. காவியா,

10,11 மைனர்களுக்கு கார்டியன் தந்தை தேவேந்திரன்,

... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 05.11.2025 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.R.உத்திராபதி அவர்கள் முன்னிலையாகியும், மனு பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் சி.பி.சி.ஆர்டர் 22 ரூல் 9 ன் படி கடந்த 18.01.2020 அன்று இறந்த 5 ம் பிரதிவாதிக்கு உடன் காலத்தில் வாரிசு சேர்க்க மனு தாக்கல் செய்யாததால் 5 ம் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்திரவினை ரத்து செய்து உத்தரவாக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்களின் மனுவின் சுருக்கம் :-</u>**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 3ம் வாதி என்றும், இதர மனுதாரர்களுக்கும் மனுதாரருக்கும் கட்சி ஒன்றுதான் என்றும், வழக்கில் மனுதாரர் எதிர்மனுதாரர்கள் பேரில் வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கானது நிலுவையில் உள்ள சமயத்தில் தாவாவில் கண்ட 5ம் எதிர்மனுதாரரான சரஸ்வதி கடந்த 18.01.2020 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 5ம் எதிர்மனுதாரருக்கு நடராசன் என்ற கணவரும் விஜயகாந்த் என்ற மகனும், ரேவதி என்ற மகளும் வாரிசுகளாக உள்ளனர் என்றும், இவர்களை தவிர்த்து வேறு வாரிசு யாரும் இல்லை என்றும், இறந்த 5ம் எதிர்மனுதாரரான ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை வாரிசு என்ற முறைப்படி அடைந்து அனுபவம் செய்து வருகின்றனர் என்றும், மேற்படி நடராஜன் தாவாவில் 4ம் எதிர்மனுதாரராக உள்ளார் என்றும், ஆகையால் கடந்த 18.01.2020 அன்று இறந்த 5ம் எதிர்மனுதாரருக்கு உடன் காலத்தில் வாரிசு சேர்க்க மனு தாக்கல் செய்யாததால் 5ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்திரவினை ரத்து செய்து உத்தரவாக வேண்டி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து இதனை மற்ற எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

3. மனுதாரரின் மனு தவறு என்றும், மேற்படி மனுதாரர்கள் தனது மனுவில் 5ம் எதிர்மனுதாரரான இறந்த தேதி ஓரிடத்தில் 18.01.2020 என்றும், இன்னொரு இடத்தில் 17.01.2021 என்றும் முன்னுக்கு பின் முரணான தேதிகளை இட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், உண்மையில் இந்த 5ம் எதிர்மனுதாரர் கடந்த 18.01.2020ம் தேதியே இறந்துள்ளார் என்றும், ஏறக்குறைய 5 வருடங்கள் ஆகியும் மேற்படி வழக்கில் 5ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சட்டப்படி வாரிசாக சேர்க்காமல் இறந்த ராமசாமியின் சொந்த தம்பியான நடராஜனின் மனைவி இறந்தது நன்கு தெரிந்திருந்தே வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற நோக்கில் உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாமல், 5ம் எதிர்மனுதாரர் இறந்த இறப்பில் கலந்து கொண்டும், வழக்கில் இருப்பது தெரிந்து கொண்டும் வீண் விவகார நோக்கில் காலதாமதமாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், ஆகையால்

மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருரப்பு வாதம் கேட்கப்பட்டது. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சானறாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

**பிரச்சனைக்கான தீர்வு:**

6. மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் வழக்கானது நிலுவையில் உள்ள சமயத்தில் தாவாவில் கண்ட 5ம் எதிர்மனுதாரரான சரஸ்வதி கடந்த 18.01.2020 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 5ம் எதிர்மனுதாரருக்கு நடராசன் என்ற கணவரும் விஜயகாந்த் என்ற மகனும், ரேவதி என்ற மகளும் வாரிசுகளாக உள்ளனர் என்றும், இவர்களை தவிர்த்து வேறு வாரிசு யாரும் இல்லை என்றும், இறந்த 5ம் எதிர்மனுதாரரான ஸ்தாவர ஜங்கம சொத்துக்களை வாரிசு என்ற முறைப்படி அடைந்து அனுபவம் செய்து வருகின்றனர் என்றும், மேற்படி நடராஜன் தாவாவில் 4ம் எதிர்மனுதாரராக உள்ளார் என்றும், ஆகையால் கடந்த 18.01.2020 அன்று இறந்த 5ம் எதிர்மனுதாரருக்கு உடன் காலத்தில் வாரிசு சேர்க்க மனு தாக்கல் செய்யாததால் 5ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்திரவினை ரத்து செய்து உத்தரவாக வேண்டியுள்ளது என்று வாதம் புரிந்துள்ளார்.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்திலும் மனுதாரர்கள் தனது மனுவில் 5ம் எதிர்மனுதாரரான இறந்த தேதி ஓரிடத்தில் 18.01.2020 என்றும், இன்னொரு இடத்தில் 17.01.2021 என்றும் முன்னுக்கு பின் முரணான தேதிகளை இட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், உண்மையில் இந்த 5ம் எதிர்மனுதாரர் கடந்த 18.01.2020ம் தேதியே இறந்துள்ளார் என்றும், ஏறக்குறைய 5 வருடங்கள் ஆகியும் மேற்படி வழக்கில் 5ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சட்டப்படி வாரிசாக சேர்க்காமல் இறந்த ராமசாமியின் சொந்த தம்பியான நடராஜனின் மனைவி இறந்தது நன்கு தெரிந்திருந்தே வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற

நோக்கில் உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாமல், வழக்கில் இருப்பது தெரிந்து கொண்டும் வீண் விவகார நோக்கில் காலதாமதமாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதம் புரிந்துள்ளார்.

8. மனு, எதிருரை, இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு கோப்பினை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி வழக்கில் இறந்துபோன 5ம் பிரதிவாதியான வாரிசுகளான மகன் விஜயகாந்த் மற்றும் மகள் ரேவதி ஆகியோர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தால் தான் அசல் வழக்கில் முழுமையான முடிவு எடுக்க முடியும் என்பதால் இறந்துபோன அசல் 5ம் பிரதிவாதி சரஸ்வதியின் வாரிசுகளை வழக்கு தரப்பினர்களாக சேர்த்து கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. எனவே, முடிவாக இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN
Digitally signed by M S KANNADHASAN
Date: 2025.11.25 18:22:17 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :**
இல்லை

M S KANNADHASAN
Digitally signed by M S KANNADHASAN
Date: 2025.11.25 18:22:23 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.